செ. கு. எண்: **03** நாள்:05.12.2011

**<u>படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பயிற்சியும், பணி நியமனமும் பெறுவதற்கான ஆணை வழங்கும் விழா</u>**

**<u>மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களது உரை</u>**

உங்கள் அனைவருக்கும் என்னுடைய இதயம் கனிந்த வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குத் தனியார் நிறுவனங்களில் பயிற்சியும், பணி நியமனமும் பெறுவதற்கான ஆணை வழங்கும் விழா இன்று நடைபெறுகின்றது.

15.8.2010 அன்று சுதந்திரத் திருநாளன்று சென்னை–புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து நான் உரை நிகழ்த்தியபோது ஒன்றைக் குறிப்பிட்டேன்;

> "ஐக்கிய நாடுகள் அமைப்பு இந்த ஆண்டினை 'உலக இளைஞர்கள் ஆண்டு' என அறிவித்திருப்பதையொட்டி, வேலை வாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு, வேலைவாய்ப்பு பெறுவதற்கேற்ற பயிற்சிகளைத் விரைவுபடுத்தும் நோக்கத்துடன், புதிய திட்டம் ஒன்று இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு படித்த இளைஞர்கள் – பொறியியல், இளங்கலை, முது கலைப் பட்டம் பெற்றுள்ள இளைஞர்கள் ஆகியோர்க்கு வேலைவாய்ப்புக்கான திறன்வளர்ப்புப் பயிற்சி இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.
>
> பயிற்சிபெற்ற இளைஞர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களில் உரிய வேலைவாய்ப்புகளைப் பெற இத்திட்டம் வழிவகுக்கும். நடப்பு ஆண்டில் ஒரு இலட்சம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவிருக்கும் இத்திட்டத்தைச் செயல்படுத்த முதற் கட்டமாக 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கான அரசாணை இந்த நன்னாளில் வெளியிடப்படுகிறது''

என்று கொடியேற்றிய இடத்திலேயிருந்து கூறினேன். அப்படி அறிவிக்கப்பட்ட அந்தச் செய்தி – அதனைத் தொடர்ந்து இந்திய தொழில் கூட்டமைப்பு நிறுவனம் அதிலே ஆலோசகராக நியமிக்கப்பட்டது. அரசின் 15 துறைகள் கண்டறியப்பட்டு, ஒவ்வொரு துறைக்கும் அத்துறையின் செயலாளர் தலைமையில் ஒரு துறைசார் பணிக் குழு அமைக்கப்பட்டு, செயல் திட்டமும் தயாரிக்கப்பட்டது. அத்திட்டம் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்திடவும், தேவைப்படும் கொள்கை முடிவுகளை மேற்கொள்வதற்காகவும் துணை முதலமைச்சர் தம்பி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அன்பரசன் அவர்களைத் துணைத் தலைவராகவும், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் சில முக்கிய துறைகளின் செயலாளர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு மாநில அளவிலான திறன் மேம்பாட்டுக் குழுமம் 25.9.2010 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை மாநில அளவில் செயல்படுத்துவதற்காக, "தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கச் சங்கம்" என்னும் அமைப்பு 22.12.2010 அன்று தமிழக அரசினால்

**ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் பணியமர்த்தப்படுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில் தேர்வு முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு – முதற்கட்டமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் 21.11.2010 அன்று நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாமில் பதிவு செய்துகொண்ட 13 ஆயிரத்து 441 இளைஞர்களை 83 தனியார் தொழில் நிறுவனங்கள் அழைத்து, நேர்முகத் தேர்வு நடத்தி, அவர்களில், 5 ஆயிரத்து 216 இளைஞர்களைத் தேர்வு செய்தன.**

**நெல்லை மாவட்டத்தில் 28.11.2010 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் பதிவுசெய்து கொண்ட 7 ஆயிரத்து 286 இளைஞர்களை 60 தனியார் தொழில் நிறுவனங்கள் அழைத்து நேர்முகத் தேர்வு நடத்தி, அவர்களில் 2 ஆயிரத்து 335 இளைஞர்களைத் தேர்வு செய்தன.**

**திருவாரூர், நாகை ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து 30.11.2010 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில், பதிவு செய்யப்பட்ட 12 ஆயிரத்து 550 இளைஞர்களை 54 தனியார் தொழில் நிறுவனங்கள் அழைத்து நேர்முகத் தேர்வு நடத்தி, அவர்களில் 4 ஆயிரத்து 703 இளைஞர்களைத் தேர்வு செய்தன.**

**கிருஷ்ணகிரி, தருமபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து 4.12.2010 அன்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் பதிவு செய்யப்பட்ட 16 ஆயிரத்து 218 இளைஞர்களை 77 தனியார் தொழில் நிறுவனங்கள் அழைத்து நேர்முகத் தேர்வு நடத்தி, அவர்களில் 5 ஆயிரத்து 346 இளைஞர்களைத் தேர்வு செய்தன.**

**எனவே இந்த ஆறு மாவட்டங்களிலும், வேலைவாய்ப்பு முகாம்களில் பதிவு செய்திருந்த 49 ஆயிரத்து 495 இளைஞர்களில், மொத்தம் 17 ஆயிரத்து 600 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் பயிற்சியும், பணி நியமனமும் பெறுவதற்கான ஆணைகள் இன்று (5.1.2011) வழங்கப்படுகின்றன. (கைதட்டல்)**

**இதனைத் தொடர்ந்து அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, விருதுநகர், தூத்துக்குடி, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய 7 மாவட்டங்களில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தமிழகம் முழுவதும் நாம் இந்த வேலைவாய்ப்பை உருவாக்குவதற்காக இந்த அரசின் சார்பில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற பெரு முயற்சியாகும்.**

**2006 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்பு இன்றைய அரசுப் பொறுப்பிலே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மக்கள் முன்னால் வைக்கப்பட்ட தேர்தல் அறிக்கையில் என்ன சொன்னோம் என்றால் –**

> **"படித்து விட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தும் கூட, எவ்வித வேலை வாய்ப்பும் பெற்றிடாத இளைஞர்களுக்கு – பத்தாம் வகுப்பு படித்து முடித்தவர்களுக்கு வேலை கிடைக்கும் வரையில் மாதம் 150 ரூபாயும், மேல்நிலைப் பள்ளிப் படிப்பை நிறைவு செய்தவர்களுக்கு மாதம் 200 ரூபாயும், பட்டதாரிகளுக்கு மாதம் 300 ரூபாயும் உதவித் தொகையாக வழங்குவோம்" என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டோம்.**

அந்தத் தேர்தல் அறிக்கையைத் தான் நம்முடைய மத்திய உள் துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் – இந்தத் தேர்தலின் கதாநாயகனே தி.மு.க. வின் இந்தத் தேர்தல் அறிக்கை தான் என்று குறிப்பிட்டார்.

“கடந்த நான்காண்டு காலமாகப் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு வயது உச்ச வரம்பைத் தளர்த்துவோம்” என்றும், – அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட "பணி நியமனத் தடையாணை" விளைவாக காலியாக உள்ள சுமார் மூன்று இலட்சம் பணி இடங்களையும் நிரப்புவோம் என்றும் கழகத் தேர்தல் அறிக்கை யிலே வாக்குறுதிகள் வழங்கினோம். அந்த வேலையைத் தான் – அந்தத் தேர்தல் அறிக்கையினுடைய உறுதி மொழியைத் தான் இந்த அரசு நிறைவேற்றி வருகின்றது. அது நிறைவேற்றுகிறது என்ற நம்பிக்கை உங்களுக்கு இருப்பதால் தான் – ஏறத்தாழ நிறைவேற்றி விட்டார்கள் என்ற மகிழ்ச்சி உங்களுக்கு இருப் பதால் தான் இன்றைக்கு இந்த மண்டபம் கொள்ளாத அளவிற்கு நீங்கள் நிரம்பி வழிகிறீர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. (கைதட்டல்)

ஆனால் இதிலே எனக்கு முழு மன நிறைவு உண்டா என்றால் இல்லை – என்றைக்கு ஒரு இளைஞன் கூட பாக்கியில்லாமல், தமிழகத்திலே வேலை வாய்ப்பினை அனைவரும் பெறுகிறார்களோ அந்த நாள் தான் நான் முழு மகிழ்ச்சி அடையக் கூடிய நாளாக இருக்க முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (கைதட்டல்)

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 27 ஆயிரத்து 347 பேர்களும் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் 26 ஆயிரத்து 354 பேர்களும், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் 1 இலட்சத்து 43 ஆயிரத்து 11 பேர்களும், காலமுறை ஊதியம் வழங்கி பணி நிரந்தரம் செய்யப்பட்ட தொகுப்பூதியப் பணியாளர்கள் 2 இலட்சத்து 93 ஆயிரத்து 606 பேர்களும், கருணை அடிப்படையில் நியமனம் செய்யப் பட்டோர் 14 ஆயிரத்து 996 பேர்களும் – என மொத்தம் 5 இலட்சத்து 5 ஆயிரத்து 314 பேர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளிலும் நிரந்தர வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இது முற்றுப் பெற்று விட்டதா என்றால் இல்லை. முற்றுப் பெற வேண்டிய காலம் இன்னும் இருக்கிறது. ஏனென்றால் இன்றைக்குப் படித்து வேலை இல்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கிக் கொண்டே இருக்கிறோம். இப்படி இளைஞர்களுடைய மனதை நிறைவு செய்கின்ற வகை யிலே வேலை வாய்ப்பை வழங்கிக் கொண்டிருக்கும்போது, இதற்கு முற்றுப் புள்ளி வைக்கப்படுமா என்று யாராவது கேட்பார்களானால், குடும்பக் கட்டுப்பாடு மூலமாக முற்றுப் புள்ளி வைக்கப்பட்டாளன்னியில் வேலை வாய்ப்புகள் வழங்குகின்ற காரியத்திற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

படித்து வேலை வாய்ப்பற்ற நிலையிலே உள்ள பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 150 ரூபாய் வீதமும், 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 200 ரூபாய் வீதமும்; பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 300 ரூபாய் வீதமும் நிவாரண உதவித் தொகை வழங்கும் திட்டம் 11.11.2006 அன்று திருச்சியில் தொடங்கி வைக்கப்பட்டு; தொடர்ந்து வழங்கப்படுகிறது.

**அந்த வகையில், இதுவரை 4 இலட்சத்து ஆயிரத்து 704 படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு 31–12–2010 வரை 284 கோடி ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் வீடுகளிலேயிருந்து அலுவலகங் களுக்குச் சென்று வேலை செய்கின்ற வாய்ப்பு இல்லாமல் வாழ்கின்ற அந்த இளைஞர்களுக்கு அரசே நிவாரணத் தொகை போல வழங்கியது இந்த ஆட்சி ஐந்தாவது முறையாகத் தொடங்கியது முதல் இதுவரையில் 284 கோடி ரூபாய் உதவித் தொகை என்பதை நான் பெருமகிழ்ச்சியோடும், பெருமூச்சோடும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பெருமூச்சு ஏனென்றால், இவ்வளவு பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்களே என்பதற்காக பெருமூச்சு. அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடிகிறதே – 284 கோடி ரூபாய் அளவிற்கு உதவி செய்ய முடிந்ததே என்பதால் பெரு மகிழ்ச்சி. பெரு மூச்சு நிற்க வேண்டும் – பெரு மகிழ்ச்சி பெருக வேண்டும். அந்த நிலைமையிலே இத்திட்டம் வெற்றி பெற வேண்டும் என்பது என்னுடைய அவா.**

**நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி அரசாங்கத்தின் இந்தத் திட்டங்களை அன்னியில் மாவட்ட அமைச்சர்களோடும், மாவட்ட ஆட்சியர்களோடும், தொழில் நிறுவனங்களோடும் இணைந்து இந்த வேலைவாய்ப்பு முகாம்களை பல மாவட்டங்களிலே நடத்தி வருகிறார். அந்த முகாம்களில், இதுவரையிலே மொத்தம் 2 லட்சத்து 33 ஆயிரத்து 712 வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்து கொண்டனர் என்றும், அவர்களில் ஒரு இலட்சத்து 33 ஆயிரத்து 998 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்துள்ளன என்றும் அறிய நான் மிக மிக மகிழ்ச்சியடைகிறேன். இந்த முயற்சியும் ஒரு வகையில் இன்னொரு புறத்திலே தொடர வேண்டுமென்று விரும்புகிறேன். வாழ்த்துகின்றேன்.**

**வேலை வாய்ப்புக்காக எத்தனையோ நிறுவனங்கள், எத்தனையோ தனியார் தொழிற்சாலைகள் தமிழகத்திலே இன்றைக்கு தோன்றினாலுங்கூட வேலை வாய்ப்பு என்ற இந்த வரத்தைக் கொடுப்பதற்கு இருதயம் வேண்டும். கையிலே பணம் இருந்தால் மாத்திரம் போதாது, தொழில் தொடங்குகின்ற அளவிற்கு வசதி இருந்தால் மாத்திரம் போதாது. அந்த வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் – தொழிலை தொடங்குபவர்கள் நான் இந்த அரசின் தொழிற்துறையையும் நிர்வகித்தவன் என்ற முறையில் ஒரு தொழிற்சாலை தொடங்குவதற்கான ஒப்பந்தத்திலே கையெழுத்து போடும்போது – அந்தத் தொழில் அதிபர்களிடத்தில் – அவர்கள் ஜப்பானிலிருந்து வந்தாலும், கொரியாவிலிருந்து வந்தாலும், வேறு எந்த நாட்டி லிருந்து வந்தாலும் கையெழுத்து போடுகின்ற நேரத்திலே அவர்களிடத்தில் நான் பெறுகின்ற உறுதிமொழி நீங்கள் வேலை வாய்ப்பு உத்தரவாதம் செய்ய வேண்டும் – அது மாத்திரமல்ல – உள்ளூர் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் – குறிப்பாக அந்தந்த வட்டாரத்திலே உள்ளவர்களுக்கு – திருப் பெரும்புதுாரிலே தொழிற்சாலை தொடங்கப்படுகிறது என்றால் – திருப் பெரும் புதுாருக்கு சுற்றுச் சூழலிலே இருக்கின்ற மக்களுக்கு – இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற உறுதிமொழியைப் பெற்றுத் தான் கையெழுத்திடுவேன்.**

**என்னுடைய தொழில் துறை பொறுப்பை தற்போது ஏற்று நடத்துகின்ற தம்பி மு.க. ஸ்டாலினும் அதே உறுதி மொழியைப் பெற்றுத் தான் புதிய தொழிற் சாலை களுக்கு ஒப்பந்தம் போடுகின்ற நேரத்திலே கையெழுத்திடுகிறார். தமிழகத்தில் தொழில்**

நடத்துவதற்கான வாய்ப்பு வசதிகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. பல மாநிலங்களோடு ஒப்பிடும் போது தமிழ்நாட்டிலே மிக வேகமாக தொழில்கள் தொடங்கப்படுகின்றன. அப்படி தொழில்கள் தொடங்கப்படும்போது வேலை வாய்ப்புகள், படித்தவர்களுக்கு மாத்திரமல்லாமல் – படித்து விட்டு வாளா இருப்பவர்களுக்கு மாத்திரமல்லாமல் – படிக்காத ஆனால் உடல் உழைப்பை நம்பியிருக்கின்ற தொழிலாளத் தோழர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப் படுகின்றன. ஒரு நாட்டிலே வேலை வாய்ப்பில்லாமல் இளைஞர்கள் துடித்தாலும் அவர்கள் வாலிபர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அந்த நாடு முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்கின்றது என்று சொல்ல இயலாது. நிறைய தொழிற்சாலைகள், வளங்கள், வசதிகள், வாய்ப்புகள் – இவைகள் எல்லாம் பெருகியிருந்தால் தான் அது முழுமையான நாடாக முடியும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் பல பகுதிகள் நாம் முன்னேறியிருந்தாலும் கூட இன்னும் முன்னேற்ற வேண்டிய பகுதிகள் நிரம்ப இருக்கின்றன. அந்த நிலையையும் நிறைவு செய்ய வேண்டும் என்ற ஆதங்கத்தோடு நான் உங்களைத் தான் நம்பியிருக்கிறேன். இளைஞர்களைத் தான் நம்பியிருக்கிறேன். இளைஞர் களால் தான் ஒரு நல்ல எதிர் காலத்தை உருவாக்க முடியும். இளைஞர்களால் தான் உருவான ஒரு நல்ல நிலையை கட்டிக் காக்கவும் முடியும். கட்டிக் காக்கவும், தட்டியெழுப்பவும் நிரம்பிய திறன் படைத்த இளைஞர்களாகிய நீங்கள் இன்று காட்டுகின்ற இதே ஆர்வத்தைத் தொடர்ந்து காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டதிலும், உங்களை யெல்லாம் சந்தித்ததிலும் – உங்கள் உள்ளத்திலிருந்து வெளிப்படுகின்ற உற்சாக வெள்ளத்தை நேரடியாகக் காண்பதிலும் பெருமகிழ்ச்சியடைந்து இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

++++++++

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.